DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 233/2023

Miscellaneous :

Sessions : PW 8

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | முருகன் |
| Father / Husband Name | ராஜகோபால் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.09.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது காரணைபுதுச்சேரியில் வசித்து ராயல் வெல்டிங் ஒயர் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். சாட்சி கோவிந்தன் என்பவரை ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா8 ன் முதலாவது கையொப்பம் அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மாதம் ஞாபகமில்லை, 2018 ம் வருடம் ஒரு நாள் காலை காவல் நிலையம் சென்றேன், போலிசார் எங்கள் கம்பெனியில் திருடுபோனது சம்மந்தமாக கையொப்பம் கேட்டார்கள் காவல் நிலையத்தில் வைத்து நான் கையொப்பம் போட்டேன். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 18.07.2018 ம் தேதி காலை 8.00 மணிக்கு நானும் கோவிந்தனும் எங்கள் கம்பெனியில் இருந்தபோது எங்கள் கம்பெனியில் ஒயர் திருடியது சம்மந்தமாக போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து அதில் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றால் போலிசார் வந்து விசாரித்தார்கள், கையொப்பம் மட்டும் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். மேற்சொன்ன பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.